பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை: 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: கார்த்திகை 22உ (8—12—67) வெள்ளி வெளியூர்: கார்த்திகை 23உ (9—12—67) சனி [இதழ்: 147

தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டம்

மத்திய அரசு ஒப்புதல்

புதுடில்லி, டிச. 8—

தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழ்கடல் துறைமுகமாக ஆக்க வேண்டும் என்ற தனி அதிகாரியின் அறிக்கைக்கு மத்திய அரசின் அமைச்சரவை இன்று ஒப்புதல் அளித்துள்ளது.

தமிழக தி. மு. க. அரசு, ஆழ்கடல் துறைமுகத்துக்காக மத்திய அரசுடன் தொடர்ந்து போராடியது நினைவுகூரத்தக்கது.

டில்லித் தெருக்களில் இந்தி வெறியர் பேயாட்டம்!

தென்னிந்தியர் பள்ளி-- குழந்தைகள் தாக்கப்படும் கோரம்!

தமிழக எம்.எல்.ஏ.-க்களும் தப்பவில்லை!

பாராளுமன்றத்தில் கொந்தளிப்பு --- விவாதம்

புதுடில்லி, டிச. 7—

ஒற்றுமை—ஒருமைப்பாடு—உலகத்தோடு ஒட்டியொழுகும் முன்னேற்றம் என்பனவெல்லாம், இன்று டெல்லி நகரத்துத் தெருக்களில் இந்தி வெறியர்களால் காட்டுமிராண்டித்தனமான அறைகூவலுக்கு உள்ளாக்கப்படுகின்றன!

இந்தி பேசும் பகுதிகளைத் தவிர, அதற்கு அப்பால் ஏதும் இந்தியப் பகுதிகளே இல்லையென்று மிக நிச்சயமாக முடிவு கட்டிக்கொண்டவர்களைப்போல் இந்தி வெறியர்கள், இன்று டெல்லி நகரத்தில் வெறியாட்டம் ஆடிக்கொண்டிருக்கிறார்கள்.

டில்லியிலுள்ள தமிழர்களின் பள்ளி தாக்கப்பட்டன—சூறையாடப்பட்டன! தென்னகத்துக் குடும்பங்களைச் சார்ந்த மாணவ மணிகள்—சின்னஞ்சிறு பிஞ்சுகள்—இந்தி வெறியர்களால் மிகக் கோரமாகத் தாக்கப்பட்டனர்!

இந்திக்கு ஆதரவாக அந்த வெறியர் கும்பல் செயல்படுகிறதா அல்லது தென்னகம் முழுவதற்கும் எதிராக அது பேயாட்டம் போடுகிறதா என்பதை, அவர்கள் சொல்லாமலே ஒவ்வொரு தென்னிந்தியக் குடும்பமும் தெளிவாகத் தெரிந்துகொள்ளும் வகையில் மாணவர்களின் போர்வையில் அங்குள்ள காட்டுமிராண்டிகள் தங்கள் வன்முறைச் செயல்களைக் கட்டவிழ்த்துவிட்டிருக்கின்றனர்!

தென்னிந்தியர்களால் நடத்தப்படும் பள்ளிகள் அனைத்துக்கும் அங்கு, 'மதராசி பள்ளிக்கூடம்' என்று வழங்கப்படுவது வாடிக்கை.

அத்தகு 'மதராசி' பள்ளிகளில் இந்தி வெறியர்கள் சூறையாடிக்கொண்டிருக்கிறார்கள். தென்னிந்தியக் குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகள் — மாணவர்கள் மிகக் கோரமாகத் தாக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

ஆட்சி மொழிகள் திருத்த மசோதாவின் மீது மக்களவையில் கடுமையான வாதம் நடந்துகொண்டிருந்தது.

அத்தகு விவாதத்தில், கழகப் பாராளுமன்க் கட்சித் துணைத் தலைவர் கி. மனோகரன் குறுக்கிட்டு, டெல்லி 'மதராசிப் பள்ளி'கள் இந்தி வெறியர்களால் தாக்குதலுக்குள்ளாகி வருவதாகவும், தென்னிந்திய குடும்பங்களைச் சார்ந்த மாணவர்கள் கடுமையாகத் தாக்கப்படுவதாகவும் அவைத் தலைவரிடம் முறையிட்டார்.

திரு. கி. மனோகரன் இவ்வாறு கூறியதைத் தொடர்ந்து மற்றொரு உறுப்பினர், 'வங்காளிகள் பள்ளிகளும் அதுபோலவே தாக்கப்படுகின்றன' எனக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய மனோகரன் அவர்கள், தமிழகத்துச் சட்டமன்ற உறுப்பினர் மூவரும் இந்தி வெறியர்களால் தாக்கப்பட்டிருப்பதை எடுத்துரைத்தார்.

கூட்டுறவுத்துறை மாநாட்டில் கலந்துகொள்வதற்காக டெல்லி வந்திருந்த தமிழகச் சட்டமன்ற கழக உறுப்பினர்களான மா. பா. சாரதி, கொளத்தூர் கோதண்டம், செஞ்சி முனுசாமி ஆகியோர் ஆக்ராவுக்குப் போகும் வழியில் டெல்லியில் வழிமறித்துத் தாக்கப்பட்டதாகக் குறிப்பிட்டு,

"இந்தி வெறியர்களின் அடுத்த இலக்கு தென்னாட்டைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள்தாம்"

என்று தாம் கருதுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மனோகரன் அவர்கள் தெரிவித்த விவரங்களுக்குத் துணை அவைத் தலைவர் கடில்கார், 'உள்துறை அமைச்சரின் கவனத்திற்கு இந்த விவரத்தைக் கொண்டு போகிறேன்' எனக் குறிப்பிட்டதுடன் தமது பொறுப்பை முடித்துக்கொண்டார்.

பாராளுமன்றத்திற்கு வெளியில் ஆட்சிமொழிகள் திருத்த மசோதாவுக்கு எதிராகச் செய்யப்படும் வன்முறை கலந்த ஆர்ப்பாட்டங்கள்—குறிப்பாகத் தென்னகத்தாருக்கு எதிர்ப்பாகவே செய்யப்படுவதாக நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன!

ஆங்கிலத்தில் எழுதப்பட்ட விளம்பரப் பலகைகள் கண்மூடித்தனமாக அழித்து நொறுக்கப்படுகின்றன!

இந்தி வெறியர்களின் இழி செயல்களைத் தடுக்க முனைவோரும்—தங்கள் சொத்துக்களைப் பாதுகாத்துக்கொள்ள விரும்புவோரும் வேதனைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்!

'மாணவர்களின் போராட்டம்' என்று சொல்லிக்கொண்டு, பள்ளிக்கூடத்தில் மழைக்குக்கூட ஒதுங்காத இந்தி மொழி வெறியர்கள், டெல்லியின் தற்போதைய 'பாதுஷா'க்களாக தர்பார் நடத்திக்கொண்டிருக்கின்றனர்!

ஆட்சி மொழிகள் சட்டத் திருத்த மசோதாவைப் பிரதிபலிக்கும் 25 அடி உயரமுள்ள கொடும்பாவி ஒன்று ஏக ஆர்ப்பாட்டத்துடன் ஆக்ராவில் கொளுத்தப்பட்டது; புகழ்பெற்ற இந்தி வெறியரான சேத் கோவிந்த தாஸ் என்பவர்தான் அதற்குத் தீ மூட்டினார்.

அவர் மூட்டிய தீ, மசோதாவைப் பிரதிபலிக்கும் கொடும்பாவிக்கு அல்ல; ஒற்றுமைக்கு ஒத்துப்போகும் தென்னிந்தியரின் சமரச முயற்சிக்கு—தங்களைத் தியாகத்திற்கு உள்ளாக்கிக்கொண்டாவது ஒருமைப்பாட்டைப் பேண நினைக்கும் தென்னகத்தார் உணர்வுக்கு எதிராக மூட்டப்பட்ட தீயாகவே அது கொழுந்துவிட்டெரிந்தது!

உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார், இராஜஸ்தான் மாநிலங்கள்தாம் 'இந்தியா' என்பதை எந்தவிதச் சமாதானங்களுக்கும் அசைந்து கொடுக்காமல் உறுதியாகக் கடைபிடிக்கும் கடைந்தெடுத்த பிற்போக்குத்தனம், இந்தி வெறியர்களால் உருவாக்கப்பட்டுவிட்டது!

இனி, ஒற்றுமை—ஒருமைப்பாடு என்றெல்லாம் பேசுவதற்குரிய உரிமையை இந்தி மாநிலத்தவர் இழந்துவிட்டார்கள் என்பது உறுதியாகிக் கொண்டுவருகிறது!

"ஒற்றுமை உணர்வும் ஒருமைப்பாட்டு முயற்சியும் தென்னாட்டிலிருந்துதான் ஒளி வீச வேண்டும்" என்கிற அளவுக்கு இந்தி மொழி வெறியர்கள் நாட்டின் 'இருட்காலத்தை' ஆரத்தி எடுத்துத் தங்கள் வன்முறைகள் மூலம் வரவேற்கத் தொடங்கியிருக்கிறார்கள்!

இந்தக் கருத்தை, கேரளத்து உறுப்பினர் ஸ்ரீகண்டன் நாயர் அவர்கள், தெளிவாக—தீர்மானமாகப் பாராளுமன்றத்தில் முழங்கியிருக்கிறார்.

என்றைக்கும் இந்தி ஏகாதிபத்தியத்திற்கு எதிராகக் குரல் கொடுக்கத் தவறாத அவர், இன்று மிக ஆத்திரத்தோடு முழங்கிய பேச்சு, இந்தி வெறியர்களின் காதில் ஏறுமா என்பது வேறு விஷயம்; ஆனால், தென்னகத்தின் உறுதி அதில் பளிச்சிட்டது உண்மை!

"உத்தரப் பிரதேசமும், பீகார் மாநிலமும் இந்தியாவை அடிமைகொள்ள முடியாது!

"தென்னாட்டை இந்தி ஆள முடியாது! இந்த முட்டுக்கட்டைத் தந்திரங்களை எங்களால் இனி சகித்துக்கொண்டிருக்க இயலாது!

"இந்தி மொழி காட்டுமிராண்டித்தனமானது; அந்த மொழிதான் உங்களுக்குத் தேவையென்றால், அதை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்; எங்களை விட்டுவிடுங்கள்"

என்று அவர் ஆவேசமாகப் பேசிய பேச்சு, தென்னகத்தவரின் ஆவேசத்தைப் பிரதிபலிப்பதாகவே இருந்தது!

ஆக, ஆட்சி மொழிகள் திருத்த மசோதா பற்றிய விவாதம், இந்தியாவை இருகூறுகளாகப் பாகுபடுத்தி இதுவரை இந்தி வெறியர் கருதிக் கொண்டிருந்ததைத் தெளிவாக விளக்குவதாகவே இருக்கிறது.

"இந்தி எப்படி வரும்?—எங்களை மீறி எப்படி வரும்?" என்று இங்கு பேசித்திரியும் காங்கிரசுக்காரர்களின் வீராப்பைக் குலைக்கும் வகையிலேயே, டெல்லிப் பாராளுமன்றத்தின் இந்தி வெறியர்கள் பேச்சும், கருத்தும் அமைகின்றன!

இவற்றிற்கு மகுடம் சூட்டியதைப்போல், தாரகேசுவரி சின்கா எனும் பெண் உறுப்பினர் பேசியிருப்பதை தென்னகம் மறக்காமல் குறித்துவைத்துக்கொண்டிருக்கிறது.

அந்தப் பெண் உறுப்பினர் இப்படித்தான் கூறினார்—

"இந்தி பேசுவோர்மீது ஆங்கிலத்தைத் திணிக்கக்கூடாது; ஆனால், இந்தி படிப்பதை எதிர்ப்பதன்மூலம் தமிழர்கள் தங்களுக்கு அநீதி இழைத்துக் கொள்கிறார்கள்; இந்தியை, 'பிற்போக்கு மொழி' என்று கூறுகிறவர்கள், நாட்டுக்கும் அரசியல் அமைப்புக்கும் துரோகிகள்!"

தேசிய மொழி—ஆட்சி மொழி—இணைப்பு மொழி—என்ற மாய்மாலமெல்லாம் மாறி, 'இந்திய அரசியல் சட்டம், இந்தியா ஆகியவற்றிற்கு இணையாகப் பயபக்தியுடன் வணங்கப்பட வேண்டிய மொழி இந்தி' என்று மிகத் துணிச்சலாக தாரகேசுவரி சின்கா போன்றவர்கள் கூறும் அளவுக்குத் தனது முகத்திரையைக் கிழித்துக் கொண்டு நம்முன் காட்சியளிக்கத் தொடங்கிவிட்டது!

இந்தியின் உண்மையான உருவம் இனி அடுத்துவரும் விவாதங்களில் நாடாளுமன்றத்தில் தெளிவாகக் காட்டப்பட்டுவிடும்.

அதுவரை நாம் பொறுமையாக நடவடிக்கைகளைக் கவனித்துவருவோம்.

மொழிகளின் மகாராணி இந்தி மொழியாம்!

மற்ற மொழிகள் அனைத்தும் அவளுக்குத் தோழிகளாம்!

"இந்தி மொழி மட்டுமே மற்ற மொழிகளைக் காட்டிலும் 'மகாராணி' அந்தஸ்தைப் பெற்றிருக்கிறது; மற்ற மொழிகள் அந்த மகாராணிக்கு இணைத் தோழிகளாக இருக்கலாம்."

—பாராளுமன்ற விவாதத்தில் இந்தி வெறியர் நாத்பாய்.

காதில் விழுந்தது!

"வந்ததும் வராததுமாக, நிஜலிங்கப்பா பேசியிருப்பதைப் பார்த்தீர்களா?"

"என்ன சொல்லியிருக்கிறார்?"

"காங்கிரசில் இருந்து வெளியே போனவர்களையெல்லாம்—'புதிய தலைவர்' என்ற முறையில்—திரும்பவும் கூப்பிட்டிருக்கிறார்."

"ஏன் — இருப்பவர்களை வைத்துக்கொண்டு கட்சி நடத்தினால் என்னவாம்?

"இது என்ன கேள்வி? நமது அரசியல் சட்டத்தைப் பற்றிக் கூறுவார்களே—'அசல் மறைந்தது; திருத்தங்கள்தான் நிற்கிறது' என்று—அதுபோல், இன்று, 'காங்கிரசுதான் இருக்கிறது; அதில் இருந்தவர்கள் இல்லை; வெளியேறிவிட்டார்கள்'—இருப்பவர்களால்தான், இன்று, காங்கிரசு இந்த நிலைக்கு வந்துவிட்டது! எனவேதான், போனவர்களைக் கூப்பிடுகிறார்—புத்துயிரூட்டுவதற்கு!"

ரூபாயின் மதிப்பு மீண்டும் குறைந்தால் மொரார்ஜியின் நிலை?

★

புதுடில்லி, டிச. 8—

"அந்நிய உதவியைப் பெறுவதற்காக மீண்டும் ரூபாயின் மதிப்பைக் குறைக்கும் யோசனை இருக்கிறதா?"

என்று மக்களவையில், இந்திரஜித் குப்தா என்பவர் கேட்டார்.

மொரார்ஜி தேசாய்:—"என்னுடைய சக்திக்குட்பட்டவரையில், மீண்டும் ரூபாயின் மதிப்பைக் குறைக்காமல் பார்த்துக்கொள்வேன்."

"அப்படியானால், இதற்கு என்ன அர்த்தம்?"

என்று சில எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கேட்டனர்.

தேசாய்:—"ரூபாயின் மதிப்பை நான் குறைக்கமாட்டேன்."

ஓர் உறுப்பினர்:— "நீங்கள் இராஜிநாமா செய்வீர்களா?"

தேசாய்:—"ரூபாயின் மதிப்பைக் குறைக்கவேண்டியிருந்தால், இராஜிநாமா செய்துவிட்டு வெளியேறுவேன்."

'நேரு உறுதிமொழியை நிறைவேற்றுக'

'அரசியல் சட்டத்தைத் திருத்துக'

இந்திராவிடம் தமிழக மாணவர்கள் மனு

புதுடில்லி, டிச. 8—

"இந்தி மொழி பேசாத பகுதி மக்கள் விரும்புகிறவரையில் ஆங்கிலம் நீடிக்கவேண்டும் என்று காலஞ்சென்ற தலைமை அமைச்சர் நேரு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும்வகையில் அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யவேண்டும்" என்று தமிழகக் கல்லூரி மாணவர்கள் குழுவின் பிரதிநிதிகள், இங்கு தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்து ஒருமனுவை அளித்தார்கள் அல்லவா? அம்மனுவின் முழு விவரம் வருமாறு:—

மதிப்புமிக்க தலைமை அமைச்சர் அவர்களே! தமிழ்நாட்டின் பல்வேறு கல்லூரிகளின் மாணவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளான நாங்கள், மத்திய ஆட்சி மொழி குறித்து தங்களுடைய ஆலோசனைக்கும், செயலுக்கும் கீழ்க்கண்டவற்றை சமர்ப்பிக்கிறோம்:—

"இந்தி மொழி பேசாத பகுதி மக்களின் மனதில் படிந்துள்ள அச்சத்தையும், தவறான கருத்தையும் போக்குவதற்கான சிறந்த வழி—நேரு அளித்த வாக்குறுதியை ஒரு திருத்தத்தின் மூலம் இந்திய அரசியல் சட்டத்தில் சேர்ப்பதுதான். 1963-ம் ஆண்டு ஆட்சி மொழிச் சட்டமோ, அல்லது அதற்குத் தற்போது கொண்டுவரப்பட்டுள்ள திருத்தமோ, ஆட்சி மொழிச் சிக்கலுக்கு நிரந்தரமான தீர்வு காண்பதற்கு வழி வகுக்காது. வெறும் சட்டத்தின் மூலமாக அல்லாமல், அரசியல் சட்டத்தின் திருத்தத்தின் மூலமாகவே இந்தி மொழி பேசாத மக்களின் உரிமைகளை நிரந்தரமாகப் பாதுகாக்க முடியும்.

9—8—1959-ம் நாள் மக்கள் சபையில், பண்டித நேரு அளித்த பின்னர், மீண்டும் உறுதிப்பாடு செய்த உறுதிமொழி வருமாறு:—

"மக்களுக்குத் தேவைப்படும்வரையில் மாற்று ஆட்சி மொழியாக ஆங்கிலத்தை வைத்துக் கொள்வேன்; அதை முடிவு செய்யும் பொறுப்பு, இந்தி பேசும் மக்களுடையதல்ல—இந்தி மொழி பேசாத மக்களுடையது."

"இந்தி மொழி பேசாத மக்களுக்குப் பாதகம் ஏற்படக்கூடிய வகையில்—அரசு வேலை நிலைகளைப் பொறுத்தமட்டில்—எவ்வித மாற்றமும் செய்யலாகாது" என்றும் இந்தி மொழி பேசாத பகுதி மக்களுக்குப் பண்டித நேரு உறுதிமொழி அளித்தார்; இந்த உறுதி மொழி, தக்க முறையில் அரசியல் சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

ஆட்சி மொழியற்றிய நேருவின் உறுதிமொழியை, சட்ட விதியின் மூலம் உருப்படியான வகையில் செயலாக்க முடியாது. அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலமே இந்த உறுதிமொழி செயலாக்கப்பட வேண்டும்.

அரசியல் சட்டத்தைத் திருத்துவதை, சில இந்தி தீவிர ஆதரவாளர்கள் எதிர்க்கிறார்கள்; 'இந்தி மொழி பேசும் மக்கள் மீது ஆங்கிலத்தைத் திணிப்பதாகும்' என்று அவர்கள் காரணம் சொல்லுகிறார்கள். ஆங்கிலத்தை நாங்கள் திணிக்கவில்லை; ஏற்கனவே இருந்து வருகிறது; ஒரே தொடர்பு மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக ஆங்கிலம் இருந்துவருகிறது.

மும்மொழித் திட்டத்தை இம்மாநிலங்கள் ஒப்புக்கொண்டுள்ளன; மூன்றில் ஒரு மொழியாக ஆங்கிலத்தைக் கற்றாக வேண்டும்; அப்படியிருக்க, இந்தி மாநிலங்கள், ஆங்கிலத்தை எதிர்ப்பது வியப்பாக இருக்கிறது.

"அரசியல் சட்டத்தின் எட்டாவது பிரிவில் ஆங்கிலத்தைச் சேர்க்க வேண்டும்" என்றே தென்னக மக்களும்—குறிப்பாக மாணவர் சமுதாயம் தீவிரமாக விரும்புகிறது.

ஆங்கிலம், கூட்டு ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதால், நேருவின் உறுதி மொழியை நிறைவேற்ற எட்டாவது பிரிவில் சேர்ப்பதுதான் நியாயமாகும்; எனவே, அரசியல் சட்டத்தின் எட்டாவது பிரிவில் சேர்க்கப்பட, தக்க நடவடிக்கைகள் எடுப்பதே முறையாகும்.

"எல்லாத் தேசிய மொழிகளும் ஆட்சி மொழிகளாக ஆக்கப்படும் வரையில், மத்திய அரசின் ஒரே ஆட்சிமொழியாக ஆங்கிலமே தொடர்ந்து நீடிக்க வேண்டும்" என்பதே தமிழக மக்களின் கோரிக்கை.

'மெஜாரிட்டி' என்ற பெயரில் மத்திய ஆட்சிமொழியாக இந்தி திணிக்கப்படுவதால், அதை, தமிழக மக்கள் முழு மூச்சாக எதிர்க்கிறார்கள்.

"இந்தியை ஆட்சிமொழியாக்கும் 343 (1)-ஆவது விதியை அரசியல் சட்டத்திலிருந்து நீக்க வேண்டும்" என்பதே எங்கள் விருப்பம்.

இந்தக் கோரிக்கைக்குத் தென்னகமெங்கும்—மேற்கு வங்கத்திலும்—மற்ற இந்தி மொழி பேசாத பகுதிகளிலும் அனுதாபம் இருந்துவருகிறது.

நாட்டின் ஒருமைப்பாட்டினைப் பாதுகாக்கும் பொருட்டுச் சமரச வழியாக—மொழிச் சிக்கலில் நேரு அளித்த உறுதிமொழியினைத் தென்னக மக்களில் கணிசமான பகுதியினர் ஏற்றுக் கொள்கின்றனர்.

நேரு அளித்த உறுதிமொழியினை செயலாக்க மத்திய அரசு தவறுமானால், மாணவர் சமுதாயத்தின்—மக்களின் குறைந்தபட்சக் கோரிக்கையைக்கூட அரசியல் சட்டத்தை நிறைவேற்றி செயலாக்க முடியவில்லையென்றால், நாட்டிற்கு அன்றைய நாள் சோக நாளாகும்!

நாடாளுமன்றத்தில் தற்போது கொண்டுவரப்பட்டுள்ள சட்டத் திருத்தம், மக்களின் கோரிக்கையை திருப்தி செய்வதாக இல்லை; காலஞ்சென்ற தலைமை அமைச்சர் நேரு அளித்த உறுதிமொழியை நிறைவேற்றுவதாகவும் இல்லை.

இந்தி மொழி பேசாத பகுதி மாணவர் சமுதாயத்தின் சார்பில் வேண்டுகோள் விடுக்கிறோம்—இது குறித்து நீங்கள் ஆழ்ந்து ஆராய்ந்து, மக்களின் வேட்கையை நிறைவு செய்வதற்கு அரசியல் சட்டத்தைத் திருத்த— தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமெனக் கோருகிறோம்.

நேருவின் உறுதிமொழியை நிறைவேற்ற வலியுறுத்தி, இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை மீண்டும் தொடங்க வேண்டிய வேதனையான சூழ்நிலைக்கு எங்களை விரட்டமாட்டீர்கள் என்று நம்புகிறோம்.

தென்னாட்டில் மொழிக் கிளர்ச்சியின்போது நூற்றுக்கணக்கான மாணவர்களின் உயிர்கள் தியாகம் செய்யப்பட்டிருக்கின்றன. மீண்டும் இந்நிலை ஏற்படாமல் தவிர்க்க வேண்டும் என்று நாங்கள் வேண்டுகிறோம்.

அரசியல் சட்டத்தைத் திருத்துவதன் மூலம், உங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி நேருவின் உறுதி மொழியை நிறைவேற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்."

இம்மனுவில் கையெழுத்திட்டுள்ள மாணவர்கள்:—டி. ஆர். சனார்த்தனன்; ஆர். சாய்நாதன்; ஏ எச். மகமத் யாகயா; செல்வி ஷீலா விக்டர்; செல்வி ஊர்மிளா பண்டரி; பி. பாண்டியன்; சாலை குணாளன்.

★

'அரசியல் சட்டத் திருத்தமே தேவை'

கருநாடக இந்தி எதிர்ப்பு அணியின் தீர்மானம்

பெங்களூர், டிச. 8—

கருநாடக இந்தி ஆதிக்க எதிர்ப்பு அணியின் கூட்டம் 3—12—67 அன்று நடைபெற்றபோது ஆட்சிமொழிச் சட்டத் திருத்த மசோதா குறித்து கீழ்க்காணும் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன:—

"இப்போது நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டுள்ள ஆட்சி மொழிச் சட்டத் திருத்த மசோதா, தென்னாட்டில் உள்ள இந்தி பேசாத மக்களின் உரிமைகளைக் காக்கப் போதுமானதாக அமையவில்லை; எனவே, அரசியல் சட்டத்தின் எட்டாவது பிரிவில் ஆங்கிலத்தையும் சேர்க்க வேண்டும்; இது ஒன்றே நாட்டின் ஒற்றுமையை நிலைநாட்டக்கூடிய செயலாகும்.

"அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் பதவியை ஏற்கச் செல்லும் முதலமைச்சர் நிஜலிங்கப்பாவுக்கு இக்குழு பாராட்டுத் தெரிவிப்பதுடன், தென்னக மக்கள் மீது இந்தி திணிக்கப்படுவதைத் தடுக்கத் தம்மாலானதைச் செய்வார் என்றும் நம்புகிறது."

உயர் படிப்பு மாணவியர் விடுதி

சென்னைப் பல்கலைக் கழகத் திட்டம்

திருச்சி, டிச. 7—

பட்டப் பிற்காலப் படிப்புப் படிக்கும் மாணவிகளுக்காகப் பல்கலைக் கழக மானியக் குழுவின் உதவியுடன், சென்னையில் ஒரு விடுதியைக் கட்ட சென்னைப் பல்கலைக் கழகம் திட்டமிட்டுள்ளது.

இதற்கு மொத்தம் ரூ. 3 இலட்சம் செலவாகும்; இதில் முக்கால் பங்கு, மானிய உதவியாகக் கிடைக்கும்.

60 இலட்சம் பேர்களே பேசும் மொழி சமவுரிமை பெறுகிறது!

ஆங்கிலமும் பிரெஞ்சும் கானடாவில் ஆட்சிமொழிகளாகும்!

நாடே பிரியக்கூடிய அபாயத்தை உணர்ந்து நடவடிக்கை

ஒட்டாவா, டிச. 7—

கானடாவை இரு மொழி—இரு கலாசார நாடாகச் சிபாரிசு செய்து இராயல் கமிஷன் கொடுத்துள்ள அறிக்கையை, கானடா தலைமையமைச்சர் திரு. லெஸ்டர் பியர்சன், நாடாளுமன்றத்தில் வைத்தார்.

கானடாவில் ஆங்கிலம் பேசும் மக்களுக்கும்—பிரெஞ்சு மொழி பேசும் மக்களுக்குமிடையே, மொழி—கலாசாரத் தொடர்புகளை ஆராய்ந்து, இரு மொழி—இரு கலாசார நாடாக்கும் வழிவகைகளைக் கண்டறியும்படி ஆணை பிறப்பித்திருப்பதாகவும், விரைவில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் பியர்சன் தெரிவித்தார்.

இதன்படி, ஆங்கிலமும் பிரேஞ்சும் நாடாளுமன்றத்தில் சம தகுதி பெற ஆட்சி மொழிகளாக அறிவிக்கப்படும்; நீதிமன்றங்களிலும், அரசு அலுவலகங்களிலும், நிர்வாக மொழிகளாக ஆக்கப்படும்.

கானடாவில் மொத்தமுள்ள 2-கோடி பேரில் 60 இலட்சம் பேர்தான் பிரெஞ்சு மொழி பேசுபவர்கள்.

"நாட்டை எதிர்நோக்கியுள்ள தேசீயப் பிரச்சினைகளை ஒரு முடிவுக்குக் கொண்டு வர, ஒன்று—நாட்டைப் பிரிக்க வேண்டும்; அல்லது புதிய ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும்"

என்று, இராயல் கமிஷன் பரிந்துரைத்திருக்கிறது.

"குயூபெக்குக்கு வெளியிலும், குயூபெக்கிலேயே சில பகுதிகளிலும், பிரெஞ்சு மொழி பேசுவோர் முழு அளவில் வாழ்க்கை நடத்த முடியாத அளவுக்குத் தற்போது நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கானடாவில் கணிசமான அளவுக்குப் பிரெஞ்சு மொழி பேசுவோர் உள்ள எந்தப் பகுதியிலும் பிரெஞ்சு மொழிக்காரர்கள் முழு உரிமையுடன் வாழக்கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்யவேண்டும்"

என்றும், இராயல் கமிஷன் கூறியுள்ளது.

வருமான வரி கொடுக்காதவர் பெயர்ப் பட்டியல்

பத்திரிகையில் வெளியாகும்?

புதுடில்லி, டிச. 7—

"வருமான வரி கொடுக்காமல் ஏமாற்றிக்கொண்டிருப்பவர்களின் பெயர்களை, மாவட்ட—உள்ளூர்ச் செய்தித் தாள்களில் வெளியிடுவதன் மூலம், கட்டாதவர்களும் வரியைக் கட்டச் செய்யலாம்" என்று கூறப்பட்ட யோசனையைப் பரிசீலிக்க நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் ஒப்புக்கொண்டிருக்கிறாராம்.

தி.மு.க. தூண்டுதலா?

அதிகாரியின் கூற்றுக்கு மறுப்பு

மைசூர் மாநில அரசில் பணியாற்றும் ஊழியர்கள், தட்சிண பாரத இந்திப் பிரச்சார சபையினர் நடத்தும் 'பிரவேஷிகா' பரீட்சையில் தேறினால், அவர்கட்கு தனிச் சம்பள உயர்வு தரப்படும் என்றும், 1968 கல்வி ஆண்டிலிருந்து பள்ளி இறுதித் தேர்வில் இந்தி கட்டாயப் பாடமாக இருக்கும் என்றும் அறிவித்துள்ள அரசாங்க அதிகாரி ஒருவர் அண்மையில் மாநிலத்தில் ஆங்காங்கே இந்தியை எதிர்த்துக் கிளர்ச்சி நடந்ததைக் குறிப்பிட்டு, 'அவை, தமிழர்கள் வாழும் பகுதிகளில் தி.மு.க.-வினரால் தூண்டிவிடப்பட்டு நடந்தவை' என்று குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

"அதிகாரியின் இந்தக் கூற்று பொய்யானது" என்று கூறியுள்ள பத்திரிகையாளர் ஒருவர், 'கிளர்ச்சி நடந்த பசவங்குடி, இராமாநகரம், தாவணகெரே போன்ற இடங்கள், கன்னடக்காரர்கள் வாழும் பகுதி' என்பதனையும் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இந்திவெறியரின் அநாகரிகச் செயல்

இரா. செழியன்--கி. மனோகரன் கண்டனம்

புதுடில்லி, டிச. 8—

மக்கள் சபைக்குள் ஆட்சி மொழித் திருத்த மசோவை ஜனசங்க உறுப்பினர் உகம் சந்த் கச்வாயி, தீயிலிட்ட செயல்பற்றி தி. மு. க. உறுப்பினர் இரா. செழியன் பின்வருமாறு கண்டனம் தெரிவித்தார்:—

"மசோதாவை சபையின் உள்ளோ வெளியிலோ எரிப்பது என்பது, இந்தி வெறியர்களின், சகிப்புத் தன்மையற்ற அநாகரிகத் தன்மையையே எடுத்துக் காட்டுகிறது.

"இத்தகைய இழிசெயல்கள் தொடர்ந்து நடக்க அனுமதிக்கப்பட்டுவிட்டால், சனநாயகக் கட்சிகளின் நிலை என்ன ஆகும்?"

நாடாளுமன்ற தி. மு. க. குழுத் துணைத் தலைவர் கி. மனோகரன் கூறியதாவது:—

"சபையின் மதிப்பையே குறைக்கக்கூடிய அநாகரிகச் செயலாகும் இது!

"1963-ல் திரு. லால்பகதூர் சாஸ்திரி ஆட்சிமொழி மசோதாவைக் கொண்டுவந்த போது, நாடாளுமன்ற மத்திய மண்டபத்தில் ஓர் உறுப்பினர் ஆட்சிமொழி மசோதாவை எரித்தார்; அதே காரியத்தைத்தான் இன்று இந்த உறுப்பினர்—திருத்த மசோதாவை எரித்ததன் மூலம்—செய்திருக்கிறார்!

"இந்த உறுப்பினர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"இந்த மசோதாமீது எங்களுக்கும் குறைபாடு உண்டு; ஆனாலும், நாங்கள் மனிதத் தன்மையுடன் நடந்துகொள்ளவே விரும்புகிறோம்."

கருநாடகமும் எழுச்சி கொள்கிறது!

கட்டாய இந்தியை எதிர்த்து மாணவர் குமுறல்

கருநாடக மாநிலத்தில் மேலும் சில இடங்களில் — மைசூரிலும், பெங்களூரிலும் கன்னடக்காரர்கள் வாழும் சில பகுதிகளில்—இந்தி கட்டாயப் பாடமாக்கப்பட்டுள்ளதை எதிர்த்து மாணவர்கள் வகுப்புகளிலிருந்து வெளியேறி, ஊர்வலங்கள் நடத்தியுள்ளனர்.

"அண்டை மாநிலமான தமிழகத்தில் நடந்ததுபோல பெருத்த அளவில் இந்தியைக் கண்டித்துக் கிளர்ச்சிகள் நடக்கவில்லை என்ற காரணத்தினாலேயே, மாணவர்களும், பெற்றோர்களும் இந்தியை விரும்பி ஏற்றுக் கொண்டுவிட்டார்கள் என்பது பொருளல்ல"

என்று பெங்களூரிலிருந்து வெளியாகும் 'டெக்கான் ஹெரால்டு' நாளேடு எழுதியுள்ளது.

பு. புளியம்பட்டி

நாவலர் மன்ற ஆண்டுவிழா

24—11—67 அன்று புன்செய் புளியம்பட்டியில் நாவலர் மன்ற முதலாம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி திரு. ஏ. அழகிரி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பி. எஸ். சீதாராமன், பு. கா. ஆறுமுகம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

முருகுபாண்டியன் குழுவினரின் 'அண்ணாவின் ஆட்சி' என்னும் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

மன்றத்திற்கு மு. சோமசுந்தரம் தலைவராகவும், ஏ. அழகிரி துணைத தலைவராகவும், பு. ர, இராமசாமி செயலாளராகவும், கோவிந்தராசு துணைச்செயலாளராகவும், கே. ஏ. ஆறுமுகம் பொருளாளராகவும், மற்றும் செயற்குழு உறுப்பினர்களாக 10 பேர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஏரல் நாவலர் படிப்பகம்

5—11—67 இரவு 7-30 மணிக்கு ஏரல் நகர தி. மு. க. செயலாளர் மு. வெ. ஆழ்வார் தலைமையில் ஏரல் புதுக்கோட்டை சாலையில் நாவலர் படிப்பகம் துவங்கப்பட்டது; நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

அவைத் தலைவர் : சு. சிவகிரிஷ்ணன்; செயலாளர் : ஆ. ந. கணேசன்; துணைச்செயலாளர் : த. அன்புரோசு; பொருளாளர் : வை. சேட் ஆதிநாராயணன்; படிப்பகப் பொறுப்பாளர் : கெ. சு. முத்து.

பழனியில்

எம். ஜி ஆர். மன்றத் துவக்கம்

26—11—67-ல் திரு ஆர். அருணாசலம் உணவு விடுதியில் பழனி நகர தி. மு க. செயலாளர் ஓ. முத்துச்சாமி தலைமையில், பழனி 15-வது வட்டம் சண்முகபுரம் (காலனி) எம். ஜி. ஆர். மன்றம் துவக்கவிழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

எஸ். சிங்கராசன் தலைவராகவும், ஆர். அருணாசலம் செயலாளராகவும், ஆர். கார்டினல் துணைச் செயலாளராகவும், டி. எம். கே. மீராமைதீன் பொருளாளராகவும், மற்றும் 11 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை 94-வது வட்ட

தமிழ் வளர்ச்சி மன்றம்

சென்னை 94-வது வட்டம் ஆலையம்மன் கோயில் தெருவில் உள்ள தமிழ் வளர்ச்சி மன்ற நிர்வாகிகள் தேர்தல், தோழர் ந. மு. வாமணன் அவர்களை ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது :—

அவைத் தலைவர் : க. ஆலை; செயலாளர் : ஆ. செயராமன்; துணைச்செயலாளர்: சி.ந. இராசன்; பொருளாளர் : எம். வடமலை; துணைப் பொருளாளர்: இல. செயராமன்; மற்றும் 16 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

சென்னைக் கல்லூரிகள்

தமிழ் மன்றம்

சென்னைக் கல்லூரிகள் தமிழ் மன்ற நிர்வாகிகள் தேர்தல், 19—11—67 அன்று நடைபெற்றது; கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : அரு. செல்லம்பாயிரம்; துணைத் தலைவர்கள் : சோம கருப்பையன், அரசு மணிமேகலை; செயலாளர் : ஆ. கனகசபாபதி; இணைச் செயலாளர்கள் : துரை கலியரத்தினம், இரா. சோதிவாணன்; பொருளாளர் : மா. செல்வராசன்; துணைப் பொருளாளர் : இரா. தங்கவேல்; செயற்குழு உறுப்பினர்கள் : ந. பாண்டியன், மு. கணபதி, வீர. சிவப்பிரகாசம், சு. கஸ்தூரி, த. பொன்முடி, ப. மூர்த்தி, முத்துசாமி, பானுமதி, சி. மணிமேகலை, ஆ. இராமு.

காடையாம்பட்டியில் கால்நடை மருந்தகம்

கால்நடை இலாகாவின் கீழ் செயல்படும் அரசினர் கால்நடை மருந்தகம் 27—11—67 காலை 9-30 மணிக்கு, காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத் துணைத் தலைவர் திரு. ஆறுமுக உடையார் தலைமையில் சேலம் மாவட்ட ஆட்சியாளரின் நேர்முக உதவியாளர் சு. மீனாட்சிசுந்தரம் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

மாவட்டக் கால்நடை அதிகாரி டாக்டர் கே. எஸ். லட்சுமிநாராயணன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

நடுப்பட்டி அரசினர் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் எஸ். வேணுகோபால், சேஷஞ்சாவடி கோழியின் விற்பனை அதிகாரி எஸ். நாராயணசாமி, காருவள்ளி ஊராட்சித் தலைவர் அ. பெருமாள், கால்நடை மருந்தகத்தின் பொறுப்பு மருத்துவர் ஆர். சின்னராசு, டாக்டர் சுப்பிரமணியம் ஆகியோர் நல்லுரை வழங்கினர்.

வட்டார வளர்ச்சி அதிகாரி பெ. தங்கப்பன் நன்றியுரைத்தார்.

திருப்பூரில் கழகப் பொதுக்கூட்டம்

திருப்பூர் அனுப்பர்பாளையம் தி. மு. கழகக் கிளையின் சார்பில் 23—11—67-ல் தோழர் செ. பழனிச்சாமி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ப. பெரியசாமி, இரா. முருகேசன், க. அன்பரசு ஆகியோர் தமிழக அரசின் சாதனைகள் பற்றியும், மத்திய அரசின் சனநாயக விரோதப் போக்கு பற்றியும் பேசினர்.

'அண்ணாவின் சீரணி'

சென்னை, டிச. 1—

'அண்ணாவின் சீரணி' என்ற பெயரில் திங்கள் இதழ் ஒன்றை நடத்துவதற்குத் தம்மை ஆசிரியராகவும் வெளியிடுபவராகவும், தலைமை மாநில மாஜிஸ்திரேட் முன்னிலையில் தோழர் முசிறிப்புத்தன் பதிவுசெய்து கொண்டார்.

தமிழர் திருநாளன்று வெளிவரும் இவ்விதழில், சீரணிச்செய்திகளுடன், கலை, இலக்கியப் பகுதிகளும் இடம்பெறும்.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்

பொதுச்செயலாளர் அறிவிப்பு

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக உறுப்பினர் பதிவுசெய்யும் 'பாரம்' கேட்டவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. டிசம்பர் திங்கள் பதினைந்தாம் நாளுக்குள் அவைகளைப் பதிவுசெய்து திருப்பி அனுப்ப வேண்டுகிறேன்.

அமைப்பு முறை

1. கலைக் கல்லூரிகள், தொழிற் பள்ளிகள் (Polytechnics) தமிழ்க் கல்லூரிகள், தொழிற் கல்லூரிகள் ஆகியவைகள் தனித்தனி கிளைக் கழகங்கள் அமைக்க உரிமை பெற்றவை.

2. உயர்நிலைப் பள்ளி மாணவர்கள், பள்ளிதோறும் கிளைக் கழகங்கள் அமைக்காது, ஊருக்கொரு கிளைக் கழகம் அமைத்துக்கொள்ள வேண்டும்; அதாவது, ஊரிலுள்ள பல்வேறு உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் ஒன்று கூடி ஒரு கிளைக் கழகம் அமைத்துக் கொள்ள வேண்டும்; ஆனால் நகராட்சிகளில்ஒன்றுக்குமேற்பட்ட கிளைக் கழகங்கள், அனுமதி வாங்கிய பிறகு அமைக்க உரிமை உண்டு.

(அ) ஒவ்வொரு மாணவர் கிளையிலும் குறைந்தது 20 உறுப்பினர்கள் இருக்கவேண்டும்.

(ஆ) ஒவ்வொரு கிளைக் கழகமும்—செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் உள்ளிட்டு 15 பேர்களுக்கு மேற்படாத செயற்குழுவினரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

4. எந்தக் கல்வி நிலையங்களிலும் ஒன்றுக்கு மேற்பட்ட கிளைகள் அமைக்கக் கூடாது.

5. உயர்நிலைப் பள்ளியிலும், அதற்கு மேற்பட்ட வகுப்புகளிலும் படிக்கின்ற வேறு எந்த அரசியல் இயக்கத்திலும் தொடர்பு இல்லாத மாணவர்கள் யாவரும், திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராகத் தகுதிபெற்றவர்.

மாணவத் தோழர்களே !

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம், அரசியல் கட்சிகள் நடத்தும் கிளர்ச்சிகளில் நேரடியாகப் பங்குகொள்ளாது, ஒதுங்கி நின்று அரசியல் சிக்கல்களைக் கூர்ந்து கவனித்து வரவேண்டுமென்ற நோக்கத்துடனும், மாணவப் பருவத்தில் அரசியலை நன்குபுரிந்துகொள்ள வேண்டும் – திராவிட மொழி, கலாச்சாரம், டண்பாடு இவைகட்கு ஊறுநேரும்போது, தங்களால் முடிந்த பாதுகாப்பு அளிக்க என்றும் தயங்காது என்ற நோக்கத்துடனும் நாடெங்கும் மாணவர் கழகங்களை உருவாக்க வேண்டுமென்று, உங்களையெல்லாம் மீண்டும் ஒருமுறை வேண்டுகிறேன்.

எஸ். டி. சோமசுந்தரம்
பொதுச்செயலாளர், தி. மா. மு, கழகம்

சென்னை 92-வது வட்ட

எம்.ஜி.ஆர். பொதுப் பணி மன்றம்

சென்னை 92-வது வட்ட பாரத்வாஜர் காலனியில் எம். ஜி. ஆர். பொதுப் பணி மன்றம் அமைக்கப்பட்டு வட்ட தி. மு. க. செயலாளர் செ. கண்ணப்பன் தலைமையிலும் —தோழர்கள் மா. செங்குட்டுவன், சோ. கி. மூர்த்தி முன்னிலையிலும் 3—12—67 அன்று நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது.

அவைத் தலைவர் : சா. கோவிந்தராசன்; செயலாளர் : தே. சி. வளர்மாறன்; துணைச் செயலாளர் : கோ. வே. தென்றல்; பொருளாளர் : வே. அ. மணிவர்மன்; மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் 9-பேர்.

சென்னை 92-வது வட்ட

அன்பழகன் படிப்பகம்

சென்னை 92-வது வட்டம் இரங்கராசபுரம் பேராசிரியர் க. அன்பழகன் படிப்பக நிர்வாகிகள் தேர்வு தோழர் க. துரை தலைமையில் நடைபெற்றது அதுபோது, வெ. செல்லபெருமாள் அவைத் தலைவராகவும், இரா. ஆனந்தன் செயலாளராகவும், பெ. அரிகிருட்டினன் துணைச் செயலாளராகவும், இ. கே. தரணி பொருளாளராகவும், எஸ். வேலு. எம். கண்ணன், வி. தாமோதரன், எஸ். தங்கப்பன், பா. சேசாத்திரி, சிவசண்முகம், பி. கே. சிவலிங்கம், பி. இராதாகிருட்டினன், ஏ. பச்சையப்பன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

உலகத் தமிழ் மாநாட்டுச் செய்திகள் :

ஊர்வலத்தைக் குடியரசுத் தலைவர் காண்பதற்குத் தனி ஏற்பாடு

சென்னை, டிச. 7—

வருகிற சனவரி 3-ம் நாள்—உலகத் தமிழ் மாநாட்டையொட்டி நடைபெறவிருக்கும் மாபெரும் ஊர்வலத்தை, குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் பார்வையிடுவதற்காகத் தனி ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

மவுண்ட்ரோடிலிருந்து ஊர்வலத்தை குடியரசுத் தலைவர் பார்வையிடுவார்; அவர் நின்று பார்வையிடுவதற்கான இடத்தைத் தேர்ந்தெடுப்பதற்காக, சென்னை நகரப் போலீசுக் கமிஷனர் திரு. குப்புசாமியும் துணைக் கமிஷனர்களும் மவுண்ட்ரோடில் பல இடங்களைப் பார்வையிட்டனர்.

அரசினர் கலைக் கல்லூரிக்கு முன்னால் உள்ள பஸ் நிற்குமிடம் இதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இந்த இடத்தில் அனைவரும் பார்த்து வியக்கத்தக்க அளவுக்கு எழில்மிகு மேடையொன்று அமைக்கப்படும்.

ஐலண்டு மைதானத்தில் :

உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, ஐலண்டு மைதானத்தில் பந்தல் அமைத்து, பல்வேறு கலை நிகழ்ச்சிகளும், சொற்பொழிவுகளும் நடத்திட மாநாட்டின் புற வேலைக் குழு ஏற்பாடு செய்து வருகிறது.

கிராமிய கலை நிகழ்ச்சிகள், கவி அரங்கு, நாடகம், நாட்டியம், சொற்பொழிவுகள் முதலியவை நடத்திட ஒவ்வொன்றுக்கும் ஓர் உட்குழு அமைக்கப்பட்டுள்ளது.

புற வேலைக் குழுவின் தலைவர் திரு. நீலநாராயணன் ஆவார்.

திரு. பரமசாமி, சாகுல் அமீது ஆகியவர்களைக் கொண்ட தொண்டர் படைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

கிராமியக் கலைக் குழுவுக்கு முன்னாள் மேயர் மைனர் மோசசும், கவியரங்குக் குழுவுக்கு நா. பாண்டுரங்கனும், பட்டி மன்றக் குழுவுக்கு டி. கே. சீனிவாசனும், இசை — நாடக — நாட்டியக் குழுவுக்கு முத்துராமலிங்கமும், சொற்பொழிவுக் குழுவுக்கு என். வி. நடராசன் எம்.எல்.சி.-யும், அரங்க அமைப்புக் குழுவுக்கு ஐசக் ஆல்பர்ட்டும் பொறுப்பாளர்களாக இருந்து பணியாற்றுகின்றனர்.

பட்டி மன்றம்

பட்டி மன்றக் குழு, திரு. டி.கே. சீனிவாசன் தலைமையில் கூடிப் பின்வரும் முடிவுகளைச் செய்துள்ளது :—

மாநாடு நடைபெறும் ஏழு நாட்களிலும், ஒவ்வொரு நாளும் 2-மணி நேரம் பட்டி மன்றம் நடைபெறும்.

தமிழ்நாட்டின் புகழ்பெற்ற நாவன்மைமிக்க சொற்பொழிவாளர்கள் இதில் பங்கெடுத்துக் கொள்ளுமாறு அழைக்கப்படுவார்கள்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தலைப்பின்கீழ், ஒட்டியும் வெட்டியும் ஆறு பேர் பேசுவர்.

புகழ்பெற்ற பேச்சாளர் ஒருவர் தலைமை தாங்குவார்.

அதிசயம்--ஆனால் உண்மை!

பெல்ஜியம் நாட்டிலுள்ள காரோட்டிகள், இந்த ஆண்டிலிருந்துதான் 'லைசென்சு' பெறும் முறையை மேற்கொள்ளுகின்றனர் !

இதுவரையில் பெல்ஜியத்தில், காரோட்டிகளுக்கு 'லைசென்சு' முறையே கிடையாது !

அண்மைக் காலமாக அதிகரித்துவரும் போக்குவரத்துப் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்ட வகையில், இனி காரோட்டுபவர்களுக்கு 'லைசென்சு' முறையை அமுலாக்குவதெனப் பெல்ஜியம் அரசு முடிவு செய்தது.

இத்தகவலை, பம்பாய் செல்லும் வழியில் நேற்று சென்னை வந்த பெல்ஜியம் நாட்டின் போக்குவரத்து அமைச்சர் பெட்ரண்ட் கூறியிருக்கிறார்.

மீண்டும்

எச்சரிக்கிறார் அஜாய் முகர்ஜி

டிச. 18-ம் நாள் முதல் ஒத்துழையாமைப் போராட்டம் !

''டாக்டர் பி. சி. கோஷ் அமைச்சரவை பதவி இறக்கப்பட வேண்டும்; கவர்னர் தர்மவீரா திரும்ப அழைக்கப்பட வேண்டும்'' என்பன போன்ற ஐக்கிய முன்னணியின் ஐந்து கோரிக்கைகளுக்குச் சம்மதிக்காவிடில், டிச. 18-ந் தேதி முதல் என்னுடைய அமைப்பு 'மாபெரும் மக்கள் ஒத்துழையாமை இயக்கத்'தைத் தொடர்ந்து நடத்தும்—என, மேற்கு வங்க முன்னாள் முதலமைச்சர் அஜாய் முகர்ஜி, தலைமையமைச்சர் இந்திராவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் எச்சரித்திருக்கிறார் !

அம்பத்தூர்

கலைஞர் கருணாநிதி மன்றம்

அம்பத்தூர் கலைஞர் கருணாநிதி மன்ற நிர்வாகிகள் தேர்தல் 26—10—67-ல் தி. மு. க. கிளை துணைச் செயலாளர் இரா. மதி அரசு தலைமையில் நடைபெற்றது; கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : என். லோகநாதன்; செயலாளர் : சி. திருவேங்கடம்; பொருளாளர் : பி. எல். சண்முகம்; மற்றும் 8-பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

சென்னை 92-வது வட்ட

அண்ணா இளைஞர் மன்றம்

3—12—67 இரவு 8 மணியளவில், கோடம்பாக்கம் யுனைடெட் இந்தியா காலனி 3-வது தெரு, 6-ம் எண்ணுள்ள இல்லத்தில் தி. மு. க. கிளைச் செயலாளர் செ. கண்ணப்பன் தலைமையில் கூடிய கூட்டத்தில், அண்ணா இளைஞர் மன்ற நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

அவைத் தலைவர் : எம். கோபால் எம்.எல்.ஏ.; செயலாளர் : பி. மணி; துணைச் செயலாளர் : எம். மாணிக்கம்; பொருளாளர் : எஸ். ஆர். இளங்கோ; மற்றும் செயற்குழு உறுப்பினர் 5 பேர்.

இரங்கல்

பெங்களூர் இராமச்சந்திரபுரம் 12-வது வட்டக் கிளைக்கழக மாவட்டப் பிரதிநிதி அன்பழகன் இயற்கையெய்தியமை குறித்து பெங்களூர் மாகடி ரோடு 22-வது வட்ட தி. மு. கழகம், தமது ஆழ்ந்த அனுதாபத்தையும், அவரது குடும்பத்தினருக்கு ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறது.

குன்னத்தூர் க. அன்பரசு

சுற்றுப்பயணம்

டிச. 9 : வேலாயுதம்பாளையம்; 10 : கோபி; 11-முதல் 15-வரை : சங்கரி; 20 : சங்கரி; 23 : சேலம்; 24 : கரூர்; 31 : சேலம்.

நரிகள் நாட்டாண்மை பெறப் போகின்றன!

இந்திபேசாதோர் இரண்டாந்தரக் குடிமக்களாக ஆகிவிடுவர்!

இந்தி வெறியர்கள் போராடிப் பெறும் மூன்று சலுகைகள்!

இரண்டு நாட்கள் நடந்த நாடாளுமன்றக் காங்கிரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில், இந்தி மொழி பேசும் உறுப்பினர்களின் வற்புறுத்தல்—அச்சுறுத்தல்களுக்குப் பணியும் வகையில் தலைமை அமைச்சரும், உள்துறை அமைச்சரும், ஆட்சிமொழி மசோதா திருத்தச் சட்டத்தில், 'மூன்று மாற்றங்களுக்கு' உடன்படுவார்கள் என்று தெரிகிறது; அவையாவன :—

1. மத்திய அரசின் வேலை வாய்ப்புக்காகத் தேர்வு எழுதும் இந்தி மொழி பேசுபவர்களுக்கு ஆங்கில அறிவு தேவையில்லை !
2. இந்தி மொழி பேசும் மாநிலங்கள், இந்தி மொழி பேசாத மாநிலங்களுக்கு இந்தியில் மட்டும் கடிதம் எழுதலாம் (இத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் வைத்து அனுப்ப வேண்டுமா வேண்டாமா என்பதும் பரிசிலனையில் இருக்கிறது).
3. மத்திய அரசின் இரு இலாகாக்கள் அல்லது நிறுவனங்கள், இந்தி மொழியிலேயே கடிதப் போக்குவரத்துக்களை வைத்துக் கொள்ளலாம்; இதற்கான ஆங்கில மொழி பெயர்ப்பினை உடன் அனுப்பும் வேலை அவைகளுக்கு இருக்காது; அதனை, வேறு ஒரு பொது அமைப்பு கவனித்துக் கொள்ளும்.

"இந்தி மொழி பேசுபவர்களின் கோரிக்கைகளுக்கு இணங்கித் திருத்த மசோதாவில் ஏற்படுத்தப்படுவதாக இருக்கும் இந்த மாற்றங்கள், இந்தி மொழி பேசாதவர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக மாற்றும்" என்று பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

இந்தி மொழிக்காரர்களுக்கு இயற்கையிலேயே சலுகைகள் கிடைப்பதற்கும், இந்தி மொழி பேசாதோர் அரசியல் அடிப்படையில்—வேலை வாய்ப்புத் துறையில் பாதகங்களைப் பெறுவதற்கும் இந்த மாற்றம் வழிகோலுவதாக இருக்கிறது !

'அரசியல் சட்டத்தில் திருத்தம் தேவை' என்ற அடிப்படைக் கோரிக்கை அப்படியே இருந்தாலும், வந்துள்ள மொழி மசோதாவாவது 'கலப்படம்' ஏதும் மேற்கொள்ளாமல் நிறைவேற்றப்பட்டால்தான், 'இந்தி மொழி பேசாதோர் ஓரளவுக்கேனும் மொழித் துறையில் பாதுகாப்பினைப் பெறமுடியும்' என்று—தமிழக அரசின் நிலையை—புதுடில்லிக்குச் சென்றிருந்தபோது, தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் உணர்த்திவிட்டு வந்திருப்பதும், நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர்கள் அறிவித்திருப்பதும் இங்கு நினைவுகூரத் தக்கது.

இராஜாஜி பிறந்த நாள் விழா

சென்னை, டிச. 8—

சுதந்தரக் கட்சித் தலைவர் இராஜாஜி அவர்களுக்கு இன்று 90-வது பிறந்த நாளையொட்டி, சென்னை நகரில், பல நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பல பகுதிகளில் ஏழைகளுக்கு உணவு அளிக்கப்பட்டது; சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது; கட்சி ஊழியர்களின் இல்லங்களில் சுதந்தரக் கட்சிக் கொடிகள் ஏற்றப்பட்டன; ஆலயங்கள்—மசூதிகள்—மாதாகோயில்களில் வழிபாடுகள் நடைபெற்றன.

பிறந்த நாள் விழாவினையொட்டி, நகரில் 15 கூட்டங்கள் நடைபெறும்; முதல் கூட்டம் 9-12-67-ல் இராயப்பேட்டை அஜந்தா ஓட்டல் பின்புறமுள்ள ஆசிரியர் காலனியில், டாக்டர் சங்கரன் தலைமையில் நடைபெறும்; அமைச்சர்கள் மு. கருணாநிதி, கே.ஏ. மதியழகன், மற்றும் சுதந்தரக் கட்சித் தலைவர்கள் பலரும் பாராட்டுரை வழங்குவர்.

அறிஞர் அண்ணா மணி விழாப் பாமாலை

வெளியீட்டுக் குழு அமைப்பு

பேரறிஞர் அண்ணா அவர்களின் அறுபதாம் ஆண்டு மணிவிழாவையொட்டி வெளியிடுவதற்கான 'பாமாலை' ஒன்றினைத் தொகுப்பதற்காகச் சென்னையில் குழு ஒன்றை அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த அமைப்புக் கூட்டம், கடந்த 2—12—67 அன்று சென்னை-லிங்கிசெட்டித் தெரு, வண்ணக் களஞ்சியம் அலுவலகத்தில் நடைபெற்றது.

தமிழகத்தின் புகழ்பெற்ற கவிஞர் பெருமக்கள் அனைவரைக் கொண்டும் 'இந்தப் பாமாலை'யைத் தொகுத்து வெளியிடுவதென முடிவு செய்யப்பட்டது.

இக்குழுவின் தலைவர்: கவிஞர் ஆனந்தம்; துணைத் தலைவர்கள்: நீலநாராயணன் கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ.; பொருளாளர்: சா. கணேசன் எம்.சி.; அமைப்பாளர்கள்: புலவர் மி. ச. நடேசன், மா. செங்குட்டுவன்.

திருச்சி வீட்டமைப்புப் பிரிவு

(மாநில வீட்டு வசதிக் கழகத்தைச் சார்ந்தது)

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

எண் 14/67-68

இரண்டு அடுக்கு பிளாக்குகள் (1-ல் 4) கட்டுவதற்கு வேலையின் பெயரும், ஒப்பந்ததாரரின் பெயரும் உறையின் மேலே குறிப்பிடப்பட்டு, முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தனித்தனியே, ஒவ்வொரு வேலைக்கும் குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் மாலை 3-மணிக்கு முன்னதாகக் கிடைக்கும்படியாக வரவேற்கப்படுகின்றன.

திட்டத்தின் பெயர்	குழு எண்	ஒவ்வொரு குழுவின் வேலைக்கும் தோராய மதிப்பீடு	ஒவ்வொரு குழுவுக்கும் பொறுப்புத் தொகை	ஒப்பந்தப்புள்ளி அனுப்ப வேண்டிய கடைசி நாள்
I. துரைசாமிபுரம், திருச்சி	I முதல் IV வரை	ரூ. 34,000	ரூ. 510	27—12—67
II. செங்குளம் காலனி, திருச்சி	I & II	ரூ. 36,000	ரூ. 540	27—12—67
III. காஜாமலை காலனி, திருச்சி	I முதல் V வரை	ரூ. 36,000	ரூ. 540	28—12—67
IV. சாலை ரோடு திட்டம், திருச்சி	I முதல் V வரை	ரூ. 36,000	ரூ. 540	28—12—67
V. நீலகிரி தெற்குத் தோட்டம், தஞ்சாவூர்	I முதல் XV வரை	ரூ. 36,000	ரூ. 540	29—12—67

ஒப்பந்த சம்பந்தமான தஸ்தாவேஜுகளை டிவிஷனல் அக்கவுண்டெண்டிடம், 11—12—67 முதல் 26—12—67 வரை அலுவல் நாட்களில்—அலுவலக நேரத்தில் ஒவ்வொரு குழுவுக்குமான ஒவ்வொரு செட்டுக்கும் ரூ. 5-ம், விற்பனை வரியும் (திரும்பப் பெற முடியாதது) செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளிகள் பெறும் கடைசி நாள் பிற்பகல் 3-15 மணிக்கு, அவை திறந்து பார்க்கப்படும்.

சர்க்யூட் ஹவுஸ் ரோடு
திருச்சிராப்பள்ளி-1

ஆர். வெங்கடாச்சார்
நிர்வாகப் பொறியர் & நிர்வாக அதிகாரி

'நவசக்தி' மீது அவதூறு வழக்கு

அமைச்சர் மு. கருணாநிதி சாட்சியம்

டிச. 15-ம் நாளுக்கு வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

சென்னை, டிச. 8—

மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் ஆகியவற்றில் செல்வோர் பாதுகாப்புத் தொப்பி அணிய வேண்டும் என்பதைப் பரிசீலிக்க விருப்பதாகப் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் அறிவித்ததும், அதையொட்டி, 'நவசக்தி' ஏட்டில் கட்டுரை ஒன்று தீட்டப்பட்டதும், அதன்பேரில் அந்த ஏட்டின் மீது தமிழக அரசினர் அவதூறு வழக்குத் தொடர்ந்ததும் தெரிந்ததே.

அவ்வழக்கில் மேற்படி கட்டுரையை எழுதிய கண்ணதாசன்—கட்டுரை வெளியான ஏட்டின் ஆசிரியரும் அச்சிடுபவரும் வெளியிடுபவருமான தனுஷ்கோடி—கௌரவ ஆசிரியர் சம்பத் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

அரசு தொடுத்த இவ்வழக்கு, 7—12—67 காலை 11 மணிக்கு, சென்னை செஷன்ஸ் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது; அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், அரசுத் தரப்பில் முதலாவது சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.

அரசு வழக்குரைஞர் பி. ஆர். கோகுலகிருட்டினன் துவக்கி வைத்து, வழக்கு விவரம்பற்றி கோர்ட்டாருக்கு விளக்கிவிட்டு, அமைச்சரை விசாரணை செய்யத் துவங்கினார்.

அரசு வழக்குரைஞர் தமிழிலேயே கேள்விகள் கேட்க—அமைச்சரும் தமிழிலேயே பதில் அளித்தார்; அவற்றை நீதிபதி ஆங்கிலத்தில் பதிவு செய்து கொண்டிருக்கையில், எதிர் தரப்பு வழக்குரைஞர் கேட்டுக்கொண்டதன்மீது சில முக்கியப் பகுதிகளைத் தமிழிலேயே எழுதிக்கொண்டார்.

அரசு வழக்குரைஞரின் விசாரணைக்குப்பின், அமைச்சரைக் கண்ணதாசன் தரப்பு வழக்குரைஞர் வி. பி. இராமனும், ஈ. வெ. கி. சம்பத் தரப்பு வழக்குரைஞர் எஸ். நடராசனும் குறுக்கு விசாரணை செய்தனர்.

பின், வழக்கு விசாரணையை நீதிபதி அவர்கள், டிச. 15-ந் தேதிக்குத் தள்ளிவைத்தார்.

அரசுத் தரப்பு வழக்குரைஞர் பி. ஆர். கோகுலகிருட்டினனுடன், வழக்கறிஞர்கள் இராசமாணிக்கம், கே. ஏ. கிருட்டினசாமி ஆகியோர் ஆசராயினர்.

(விசாரணை விவரம் நாளை)

மருத்துவமனையில் தயாளு கருணாநிதி

அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது

சென்னை, டிச. 8—

பொதுப் பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்களின் துணைவியார் திருமதி தயாளு அவர்கள், வயிற்றுவலியின் காரணமாக நேற்று பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்; குடலில் புண் ஏற்பட்டிருப்பதால், அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

திருமதி தயாளு கருணாநிதி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது, அமைச்சர் கருணாநிதி அவர்கள், நீதிமன்றத்தில், 'நவசக்தி' இதழுக்கு எதிராக அரசு தொடுத்துள்ள அவதூறு வழக்கில் சாட்சியமளித்துக்கொண்டிருந்தார்.

சாட்சியம் அளித்து முடிந்ததும், அமைச்சரிடம் தகவல் தெரிவிக்கப்பட்டது; உடனே அவர், நேரே மருத்துவமனைக்குச் சென்றார்.

திருத்தம்

'நம் நாடு' சென்னை 7—12—67 இதழ் நான்காம் பக்கத்தில், இந்தி மொழி மசோதாத் திருத்தச் சட்டம்பற்றி வெளியாகியுள்ள செய்தியில்—சில இதழ்கள்—'உணவுப் பிரச்சினை' என்று வெளிவந்துள்ள தலைப்பினை, 'உணர்வுப் பிரச்சினை' எனத் திருத்தி வாசிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நான்காம் பக்கத்திலேயே வெளிவந்துள்ள 'யார் வைத்த கொள்ளி?' என்ற கட்டுரையில், '1953-ம் ஆண்டு' என்றிருப்பதற்குப் பதில், '1963-ம் ஆண்டு' என இருக்கவேண்டும்.

—ஆசிரியர்

புதுவை வட்ட தி.மு.க.

கிளைக் கழகச் செயலாளர்கட்கு வேண்டுகோள்

புதுவை வட்டத்திலுள்ள கிளைக் கழகச் செயலாளர்களின் ஆலோசனைக் கூட்டம் ஒன்று 10—12—67 பிற்பகல் 2-மணியளவில், மகாத்மா காந்தி வீதி, 35-எண்ணுள்ளக் கட்டிடத்தில் நடைபெறும்; கிளைக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் எம். ஏ. சண்முகம் கேட்டுக் கொள்கிறார்.

படி அரிசித் திட்டம்

மேலும் 88 ஊர்களில் பொங்கல் முதல் அமுலாகும்

சென்னை, டிச. 8—

தற்போது சென்னையிலும், கோவையிலும் வழங்கப்பட்டு வரும் ரூபாய்க்குப் படி அரிசித் திட்டம், பொங்கல்முதல் மேலும் 88 ஊர்களில் அமுலாக்கப்படும்.

இத்திட்டம் விரிவுபடுத்தப்படுவதுபற்றி, உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன், செய்தியாளர்களிடம் கூறியதாவது:—

"பருவமழை தவறியதாலும், சம்பா விளைச்சல் எதிர்பார்த்த அளவு இருக்காது எனத் தற்போது கருதப்படுவதாலும், படி அரிசித் திட்டத்தைத் தமிழகம் முழுவதிலும் அமுலாக்கும் திட்டம்பற்றி அரசு, மறு பரிசீலனை செய்துவருகிறது.

"ஆயினும், நகராட்சிகள் உள்ள நகரங்கள், 'டவுன் ஷிப்'கள் ஆகியவற்றில் மட்டும், பொங்கலன்று, படி அரிசித் திட்டத்தை அமுலாக்கத் திட்டமிட்டிருக்கிறோம்."

தமிழ்நாட்டில் 84 நகரசபை (முனிசிபல்) நகரங்களும், 4 'டவுன் ஷிப்'களும் உள்ளன; இங்கெல்லாம் படி அரிசித் திட்டம் அமுலாக்கப்படுவதால், 44 இலட்சம் மக்கள் பயனடைவார்கள்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

10--12--67

குடந்தை

பொதுத் தொழிலாளர் முன்னேற்ற சங்கத் துவக்க விழா; மாலை 6-மணிக்கு மூர்த்தி கலை அரங்கில்; தலைவர்: கே. எஸ். சோமு; பேசுவோர்: என். வி. நடராசன் எம்.எல்.சி., சு. பத்மநாபன், பி. வி. செயராமன் எம்.ஏ.,எம்.சி., ப. கோதண்டபாணி எம்.சி., பழனிச்சாமி எம்.சி., கோ. வெங்கடாசலம், எஸ். ஆர். இராதா எம்.சி.

மதுரை—செய்கிந்துபுரம்

அண்ணா அறிவக முதலாவது ஆண்டு நிறைவு விழா: இரவு 7-மணிக்கு செய்கிந்துபுரத்தில்; தலைவர்: பி. முருகேசன்; பேசுவோர்: வெ. கண்ணன், மற்றும் பலர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.)